**இலங்கை நிர்வாக சேவை ,இலங்கை பொறியியல் சேவை ,இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை கட்டடக் கலைஞர் சேவை, இலங்கை கணக்காளர் சேவை மற்றும் இலங்கை திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை) 2016 – II) மற்றும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2017 (I)**

2017.04.12 திகதிய வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட குறித்த வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் பந்தி 12.8.3 (III), பந்தி 14.2 மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் பந்தி 13 கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்படுகிறது

i. .பரீட்சை அறிவித்தலில் பந்தி 12.8.3 (III) கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்பட வேண்டும்

III. தற்போதைய சர்வதேச பொருளாதார நெருக்கடி நிலையும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்துக்கு ஏற்படும் தாக்கமும் (பாட இலக்கம் 23) 100 புள்ளிகள்

தற்போதைய சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம். (அவ் அப்போதைய சந்தர்ப்பங்களில் ஏற்படும் உலகப் பொருளாதார நிலைமைகளுக்கு காலத்துக்கேற்ற வகையிலான தலைப்புக்களுக்கு உரித்துடைய விடைகளை வழங்குதல் வேண்டும்)

குறிப்பு : இப் பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

ii. பரீட்சை அறிவித்தலில் பந்தி 14.2 இன் அட்டவணைக்கு பதிலாக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை மாதிரியாக அமைதல் வேண்டும்

| | **2005 .11.14 ஆம் திகதிய 1419/3 ஆம் இலக்க முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பு** | **2013.12.23 ஆம் திகதிய 1842/2 ஆம் இலக்க புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு** |
|---|---|---|
| 01. | சட்டம் (முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) | சட்டம் (முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) |
| 02. | நிர்வாகம் (முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) | நிர்வாகம் (முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) |
| 03. | பொருளியல் அல்லது சமூகவியல் (முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) | பொருளியல் மற்றும் சமூகவியல் (முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) |
| 04. | அரச துறையின் நிதியியல் முகாமைத்துவம் (இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) | அரச துறையின் நிதியியல் முகாமைத்துவம் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் (முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை ) |
| 05. | ஆங்கிலம் ( முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) | இணைப்பு மொழித் தேர்ச்சி (இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) |
| 06. | பொருளியல் மற்றும் சமூகவியல் (இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) | பொருளியல் மற்றும் சமூகவியல் (இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) |
| 07. | அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகள் (இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) | அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகள் (இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) |
| 08. | முகாமைத்துவம் மற்றும் அமைப்பு முறைகள் (இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) | முகாமைத்துவத்திற்கான தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனை (இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) |

ii. ஆங்கில அறிவித்தலில் பந்தி 13 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நேர சூசியின் தொடர் இலக்கம் 9 கீழ்குறிப்பிட்டவாறு திருத்தப்பட வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 09 | 2nd Efficiency Bar Examination for Officers of Sri Lanka Planning Service | Techniques of Development Planning | 21 | 2017.07.16 | 12.30 p.m - 3.30 p.m |
| | | Basic Macro Economics | 22 | 2017.07.22 | 9.00 a.m - 12.00 p.m |
| | | Current International Economic Crises and their impact on Sri Lankan Economy | 23 | 2017.07.22 | 12.30 p.m - 3.30 p.m |

குறிப்பு :

(அ) இத் திருத்தத்தினால் இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2017 (I) க்காக விண்ணப்பப்படிவம் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 2017.05.29 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பரீட்சைக்கு இரண்டாவது முறையாக தோற்றும் அலுவலர் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் தொடர்பாக கீழ்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

i. இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ள அலுவலர்களுக்காக பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் தொடர்பாக பரீட்சை அறிவித்தலின் 6ஆம் பந்தியின் ஏற்பாடுகள் மேலும் வலுவிலிருப்பதுடன் அதன்படி இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் ஒரு பாடத்துக்கு மட்டும் விண்ணப்பித்திருந்த விண்ணப்பதாரியொருவர் இத் திருத்தத்தின் மூலம் மேலுமொரு பாடத்துக்கு விண்ணப்பிப்பதாயின் மேலதிகமாக ரூ. 500/- பரீட்சைக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும்

ii. ஏதேனும் ஒரு காரணத்தினால் முன்னைய பரீட்சை அறிவித்தலின் படி இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் பல பாடங்களுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரியொருவர் தற்போது ரூ. 1000/- பரீட்சைக் கட்டணமாக செலுத்தியுள்ளதனால் இத் திருத்தத்தினால் இப் பரீட்சையில் இன்னுமொரு பாடத்திற்கு அல்லது பல பாடங்களுக்கு விண்ணப்பிப்பதாயின் மேலதிகப் பரீட்சைக்கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

(இ) வர்த்தமானி அறித்தலின் படி தற்போதுவரை இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கு (2017 I) விண்ணப்பித்து இத் திருத்தத்தினால் மீண்டும் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரியொருவர் இரண்டாவது முறையாகவும் பரீட்சை அனுமதி அட்டையினை பதிவிறக்கம் செய்ய வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் போது இரண்டாவது முறையாக பதிவிறக்கம் செய்த பரீட்சை அனுமதி அட்டையே செல்லுபடியாகும்

(ஈ) இது தொடர்பாக எதேனும் சிக்கல்கள் ஏற்படின் அது தொடர்பாக தெளிவூட்டல்களை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்தில் 2017.05.29 ஆந் திகதி வரை வார அலுவலக நாட்களில் மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 4.15 வரை பெற்றுக்கொள்ள முடியும்.

(உ) இத் திருத்தத்தினால் பரீட்சை நடைபெறும் திகதியில் எவ்வித மாற்றமும் இல்லை.

ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

2017 மே மாதம் 4ம் திகதி

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07